[13th December 1961

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது நடைபெறும் 110 மாதர் சங்கங்களுக்கும் ரூ. 2,500 என்று இருக்கிறது. அது போதுமா ? இந்த தொகையை மேலும் அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரூ. 2,500 ஒதுக்கி இருக்கிறது என்றால், இன்னின்ன வேலைகள் செய்யவேண்டும் என்று அது செய்யப்பட்டிருக்கிறது. மேலே அதிகம் தொகை வேண்டும் என்று அவசியம் இருந்தால், அது கவனிக்கப்படும். ஆனால், ஒதுக்கிஇருக்கும் தொகை ரூ. 2,500 என்பதற்காக அதிக மாக ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை.

DEPUTY SPEAKER : Questions 2284, 2285, 2286 2288, 2289, 2292, 2294, 2299, 2302 2303, 2305, 2309, 2311, 2313 are postponed as the Hon. Minister for Industries, Sri Venkataraman, who was expected yesterday, did not return. Those questions will be taken up soon after he returns.

SRI T. S. RAMASWAMI : The Hon. Minister in charge of Industries is here.

DEPUTY SPEAKER : Those questions are to be answered by the Hon. Sri Venkataraman and not by the Hon. Minister for Home.

Bridge across Kadila river

* 2287. *Q.*—SRI M. KANDASAMY PADAYACHI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை-திருவெண்ணெய்நல்லூர் போகும் ரோட்டிலுள்ள கடில நதியின் குறுக்கே பாலம் கட்ட உத்தேச முண்டா ?

(ஆ) அப்படியானால் எப்போது வேலை துவக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(ஆ) The work, which has been carried over to the Third Five-Year Plan as a committed work, will be taken up for execution after revised sanction by Government.

Krishnagiri Panchayat

* 2290. *Q.*—SRI N. MARUDHACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா, கிருஷ்ணகிரி பஞ்சாயத்து போர்டு அதிகாரியின்மீது பணம் கையாடல் ஊழல் விஷயமாக புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) அப்படியானால், அவைகளின்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(இ) இல்லை என்றால், காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(ஆ) & (இ) The matter is under consideration.